**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**M.C.O.P.No.318/2023**

2025 ஆம் வருடம் ஜூலை மாதம் 07 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு . யுவராஜா (ம.சா.1) | தொழில் | : --- |
| த/பெ. | : திரு . ரவிச்சந்திரன் | வயது | : 25 |
| க/பெ. | : | | |
| கிராமம் | : ஆயக்குடி | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 07.07.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**முதல் விசாரணை :-**

நான் இம்மனுவில் மனுதாரர். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 - | முதல் தகவல் அறிக்கை (இணைய நகல்) |
| ம.சா.ஆ.2 | 1-ம் எதிர்மனுதாரர் வாகன பதிவு சான்று (இணைய நகல்) |
| ம.சா.ஆ.3 | 2-ம் எதிர்மனுதாரர் வாகன காப்பீட்டுச்சான்று (இணைய நகல்) |
| ம.சா.ஆ.4 | 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனர் உரிமம் (இணைய நகல்) |
| ம.சா.ஆ.5 | 1ம் எதிர்மனுதாரர் மோட்டார் வாகன ஆய்வறிக்கை (இணைய நகல்) |
| ம.சா.ஆ.6 | விபத்துப்பதிவேடு (இணைய நகல்) |
| ம.சா.ஆ.7 | காயச்சான்று (இணைய நகல்) |
| ம.சா.ஆ.8 | ஸ்கேன் ரிப்போர்ட் (அசல்) (2 எண்ணிக்கை) |
| ம.சா.ஆ.9 | நுண்கதிர் படங்கள் (அசல்) (1 எண்ணிக்கை) |
| ம.சா.ஆ.10 | டிஸ்சார்ஜ் சம்மரிகள் (அசல்) (3 எண்ணிக்கை) |
| ம.சா.ஆ.11 | மருந்து மற்றும் மருத்துவமனை பில்கள் ரூ.14,30,922/-க்கானது (78 எண்ணிக்கை) (2ம் எதிர்மனுதாரர் தரப்பு |

ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

| | |
|---|---|
| ம.சா.ஆ.12 | தொடர் சிகிச்சைகள் எடுத்துக்கொண்டதற்கான மருத்துவக்குறிப்புகள் (அசல்) (12 எண்ணிக்கை) |
| ம.சா.ஆ.13 | யுவராஜ்–க்கு பொருத்தப்பட்டுள்ள செயற்கை காலை எதிர்காலத்தில் தொடர்ந்து பராமரிக்கவும், உதிரி பாகங்கள் மாற்றவும் ஆகும் செலவு குறித்து Otto Bock நிறுவனத்தால் வழங்கப்பட்ட சான்று (அசல்) (2ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) |
| ம.சா.ஆ.14 | யுவராஜ்–க்கு வலது கையில் பொருத்தப்பட்டுள்ள பிளேட் மற்றும் ஸ்குருக்களை அகற்ற ஆகும் செலவு குறித்து மருத்துவர் வழங்கிய மருத்துவச் சான்று (அசல்) (2ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) |
| ம.சா.ஆ.15 | யுவராஜ் ஓட்டிச்சென்ற வாகன பதிவுச் சான்று (இணைய நகல்) |
| ம.சா.ஆ.16 | யுவராஜ்–ன் வாகன காப்பீட்டுச் சான்று (இணைய நகல்) |
| ம.சா.ஆ.17 | யுவராஜ் வாகன ஓட்டுனர் உரிமம் (இணைய நகல்) |
| ம.சா.ஆ.18 | யுவராஜ் ஓட்டிச்சென்ற வாகனத்தின் மோட்டார் மோட்டார் வாகன ஆய்வறிக்கை (இணைய நகல்) |
| ம.சா.ஆ.19 | யுவராஜ்–க்கு ஏற்பட்ட காயங்களின் புகைப்படம் மற்றும் சி.டி. (அசல்) |
| ம.சா.ஆ.20 | யுவராஜ் Medplus medical shop–ல் Pharmacist ஆக வேலை செய்ததற்கான பணி அடையாள அட்டை நகல் |
| ம.சா.ஆ.21 | குற்ற இறுதி அறிக்கை (இணைய நகல்) |
| ம.சா.ஆ.22 | ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது) |
| ம.சா.ஆ.23 | வருமான வரி கணக்கு அட்டை நகல். |
| நீ.ம.சா.ஆ.1 | ஊனச்சான்று. |

மனுப்படி உத்தரவாக கேட்டுக்கொள்கிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு முழுமையாகத் தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் சம்பவ இடத்தின் மாதிரி வரைபடம் என்று சொன்னால் சரிதான். மேற்படி மாதிரி

வரைபடம் எ.ம.சா.ஆ.1. எ.ம.சா.ஆ.1ல் சம்பவ இடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சாலையின் மையப்பகுதிக்கு அருகில் விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.5 மற்றும் ம.சா.ஆ.18 ஆகிய இரண்டு மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளில் இருவாகனங்களுக்கும் முன்பகுதியில்தான் சேதம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற அறிக்கையில் நான் தலைக்கவசம் அணிந்துசென்றதாக எவ்வித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.7 காயச்சான்றில் எனக்கு கால் மற்றும் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு இடுப்பு பகுதியிலும் காயம் ஏற்பட்டது. மேற்படி காயச்சான்றில் ரேடியாலஜி அறிக்கையில் right arm - no bone injury என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சாலையின் மையப்பகுதிக்கு வந்து நானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டதாகச் சொன்னால் சரியல்ல, அந்த கார்தான் மற்றொரு வாகனத்தை ஓவர்டேக் செய்து வந்து விபத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால்தான் மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல.

3. நான் பின்னிட்டு கங்கா மருத்துவமனைக்கு தொடர்சிகிச்சைக்குச் சென்றேன். அப்போது தொடர்சிகிச்சை அளித்த மருத்துவர் 16.12.2023 அன்று எக்ஸ்ரே எடுக்கப்பட்டு, வலது கையில் எலும்பு முறிவு நன்கு கூடிவிட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 20.01.2024 அன்று மருத்துவர் வலது கையை தினசரி வேலைகளுக்கு பயன்படுத்தலாம் என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், ஆனால் எனக்கு தண்டுமாற்று அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்றும் அவர் கூறினார், மேலும், என்னால் மூன்று விரல்களை சரியாக பயன்படுத்த முடியவில்லை. நான் சொன்ன மேற்படி விபரங்கள் எனது மருத்துவ அறிக்கையில் இல்லை என்றும், தவறான

முறையில் இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக நான் அவ்வாறு தெரிவிப்பதாகச் சொன்னாலும் சரியல்ல.

4. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.14 செயற்கைக் காலுக்குண்டான செலவு குறித்த Tax invoice–ல் பணம் செலுத்தியதற்கான ரசீது இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.13 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றும், மேற்படி நிறுவனத்தை விசாரித்தால் மட்டுமே உண்மை விபரங்கள் தெரியவரும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் நிதர்சனா மருத்துவமனையில் சிகிச்சை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. 28.10.2024 தேதியன்று மட்டுமே மேற்படி மருத்துவமனைக்கு சான்று பெறுவதற்காக மட்டுமே நான் சென்றேன் என்றும், பழனி நிதர்சனா மருத்துவமனையில் நான் எவ்வித சிகிச்சையும் பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றும், மேற்சொன்ன மருத்துவரை விசாரித்து உண்மைத் தன்மையை நிரூபிக்காத வரை மேற்படி ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

5. மெட்பிளஸ் நிறுவனத்தில் நான் பார்மசிஸ்ட்டாக வேலை பார்த்தேன் என்பதற்கு வருகைப்பதிவேடு, சம்பளப் பதிவேடு, எப்போது பணிக்கு சேர்ந்தேன், எப்போது பணியில் இருந்து விலகினேன் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பார்மசிஸ்ட் படிப்பு படித்துள்ளேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் டிகிரி முடித்துள்ளேன். பார்மசிஸ்ட்டுக்கான பயிற்சியை மெட்பிளஸ் நிறுவனத்தில் எடுத்துக்கொண்டேன். அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு செயற்கைக் கால் பொருத்தப்பட்டு நல்ல நிலையில் இருந்து வருவதாகச் சொன்னால் சரியல்ல.

6. பார்மசிஸ்ட்டாக வேலை பார்த்ததற்கும், விவசாயம் மற்றும் பால் வியாபாரம் செய்ததற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :–** இல்லை.

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2025.07.07 19:15:05 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.